THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS OF SRI LANKA

# SUGGESTED SOLUTIONS

NOT FOR SALE

**KE 5 – Commercial Insight for Management**

**September 2016**

All Rights Reserved

# பிரிவு 1

**வினா 01**

1.1

| கற்கை வெளிப்பாடு: 1.1.1 வியாபாரம் மற்றும் வியாபார அமைப்புக்கள் எனும் பதங்களை பொருள்வரையறை செய்தல். |
|---|
| **சரியான விடை C** |

1.2

| கற்கை வெளிப்பாடு : 2.8.2 பொருளியற் பொருட்களின் வகைகளை விபரித்தல் (வழமையான பொருட்கள், ஜிபன் (Giffen) பொருட்கள், தரங்குறைந்த பொருட்கள் வெப்லன் (Veblen) பொருட்கள் மற்றும் பொதுப் பொருட்கள் அடங்கலாக) |
|---|
| **சரியான விடை A** |

1.3

| கற்கை வெளிப்பாடு : 5.3.1 அதிகாரம் (authority), பொறுப்பு (responsibility), வலு (power) மற்றும் வகைகூறல் (accountability) ஆகிய கோட்பாடுகளை பொருள்வரையறை செய்தல். |
|---|
| **சரியான விடை A** |

1.4

| கற்கை வெளிப்பாடு : 3.6.2 வேறுபட்டவகையான நெகிழ்ச்சிகளை (elasticity) கணித்தல். |
|---|
| **சரியான விடை B** |

1.5

| கற்கை வெளிப்பாடு : 3.8.1 வேறுபட்ட வகைப்படுத்தல்களின்கீழ் போட்டியாளர் வகைகளை இனங்காணல். |
|---|
| **சரியான விடை B** |

1.6

| கற்கை வெளிப்பாடு : 3.11.1 நிறைபோட்டி, ஏகஉரிமைப் போட்டி, ஏகஉரிமை, சிலருரிமை ஆகியவற்றின் குணாம்சங்களையும் வியாபாரங்களின் மீது அவற்றின் தாக்கங்களையும் விபரித்தல். |
|---|
| **சரியான விடை B** |

NOT FOR SALE

1.7

| |
|---|
| கற்கை வெளிப்பாடு : 6.3.1 வரைபடங்களின் உதவியுடன், குறுங்கால மற்றும் நீண்டகால வேறுபட்ட கிரயக் கோட்பாடுகளை ஆராய்தல் (மொத்தக் கிரயம், எல்லைக் கிரயம், சராசரிக் கிரயம்) |
| **சரியான விடை D** |

1.8

| |
|---|
| கற்கை வெளிப்பாடு : 6.7.1 வரைபடங்களின் உதவியுடன், குறுங்கால மற்றும் நீண்டகால உற்பத்திக் கோட்பாடுகளையும் அவை தொடர்புபட்ட உற்பத்தி அளவீடுகளையும் பொருள்வரையறை செய்தல் (மொத்த உற்பத்தி, சராசரி உற்பத்தி, எல்லை உற்பத்தி). |
| **சரியான விடை C** |

1.9

| |
|---|
| கற்கை வெளிப்பாடு : 5.5.1 'கட்டுப்படுத்தல்' பதத்தினை பொருள்வரையறை செய்தல் |
| **சரியான விடை B** |

1.10

| |
|---|
| கற்கை வெளிப்பாடு : 6.15.1 செயற்திட்ட முகாமையின் அடிப்படைக் கோட்பாடுகளை இனங்காணல் |
| **சரியான விடை D** |

**(மொத்தம்: 20 புள்ளிகள்)**

NOT FOR SALE

**வினா 02**

2.1

| கற்கை வெளிப்பாடு : |
|---|
| 1.6.1 தற்கால வேலைச்சூழலின் மாறும் தன்மை மற்றும், கணக்காளரின் வகிபாத்திரத்தில் அது கொண்டுள்ள தாக்கத்தை இனங்காணல். |

- வியாபார அலகுகள், செயற்திட்டங்கள், உற்பத்திப் பொருட்கள், வாடிக்கையாளர் பற்றிய அதிக பயனுள்ள தகவல்களை வழங்குதல்.
- புதிய முதலீடுகளுக்கு வியாபார உதாரணங்களை வழங்குதல்.
- வழங்கிய தகவல்களை தொழிற்பாட்டு மட்ட முகாமையாளர்கள் விளங்கிக்கொள்ள ஏதுவாக உதவிசெய்தல்.
- தந்திரோபாயத் திட்டமிடல் மற்றும் பாதிடு தயாரித்தலில் இணைந்து செயற்படல்.
- தொழிற்பாட்டு முகாமையாளர்களுக்கு அதிக பயனுடைய தகவல் முறைமைகளை வடிவமைத்தல்.

2.2

| கற்கை வெளிப்பாடு : |
|---|
| 3.10.1 வரைபடம் மூலம் மாத்திரம் இலாபத்தை உச்சப்படுத்துதலில் மொத்த வருமானம் /மொத்தக் கிரய அணுகுமுறை மற்றும் எல்லை வருமானம் / எல்லைக் கிரய அணுகுமுறைகளை விபரிக்குக. |

சராசரி வருமானம் சராசரிக் கிரயத்தைவிட அதிகமாக உள்ளதனால், குறுங்காலத்தில் நிறுவனங்கள் அதிமிகை இலாபங்களை பெறுகின்றன. நிறைபோட்டியின் ஒரு சிறப்பம்சம் தடையற்ற பிரவேசமும் வெளியேறுதலும் ஆதலால், இந்த இலாபத்தால் புதிய நிறுவனங்கள் தொழிற்துறையுள் ஈர்க்கப்படுவதனால், விலைகள் சரிவடைகின்றன. அதன் காரணமாக நிறுவனங்கள் நட்டமடைய ஆரம்பிக்கின்றன. நீண்டகால ஓட்டத்தில் நட்டம் காரணமாக நிறுவனங்கள் தொழிற்துறையை விட்டு வெளியேறுவதன் காரணமாக, விலை மீண்டும் அதிகரிக்க ஆரம்பிக்கும்.




Graph 1




Graph 2

NOT FOR SALE

2.3

| கற்கை வெளிப்பாடு: |
|---|
| 3.12.1 வேறுபட்ட சந்தைகளில் குறுங்காலத்திலும் நெடுங்காலத்திலும் வியாபாரங்கள் எவ்வாறு உத்தம உற்பத்தி, விலை மற்றும் இலாபத்தை தீர்மானிக்கின்றன என விளக்குக. |




தனியுரிமைச் சந்தையில் எல்லைச் செலவும் எல்லை வருமானமும் சமமாகவும் அத்துடன் சராசரி வருமானம் P1 இருக்கும் போது உச்ச இலாபத்தினை உழைக்கின்றது தனியுரிமைச் சந்தையானது அதி உச்ச இலாபத்தினை உழைக்கின்றது இதனை தெளிவாக P1 BCD என்ற செவ்வக வடிவம் காட்டுகின்றது.

2.4

| கற்கை வெளிப்பாடு: |
|---|
| 4.3.1 ‘‘நான்கு துறை மாதிரியில்’’ (Four Sector Model) வருமான மற்றும் செலவின சுற்றுவட்ட பாய்வுகளை இனங்காண்க. |

(i) வரி, சேமிப்பு, இறக்குமதிச் செலவினம்
(ii) வரியானது முதலீடுகளை ஊக்குவிக்காது. பொருளாதார வளர்ச்சி தடைப்படும்.

2.5

| கற்கை வெளிப்பாடு: |
|---|
| 4.5.1 நாணயமாற்று வீதங்கள் எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றது எனவும், இந்த மாற்றம் வியாபாரங்களை எவ்வாறு தாக்கத்திற்கு உள்ளாக்குகின்றதெனவும் விபரிக்குக. |

- அரசாங்கம் அந்நிய நாணய ஒதுக்கங்களில் செலவுசெய்யவோ அல்லது அவற்றை வைத்திருக்கவோ வேண்டியதில்லை.
- சென்மதி நிலுவைப் பற்றாக்குறை அல்லது மிகை சுயமாக திருத்தப்படும்.
- நாணயமாற்று வீதங்களை பேணுவதில் வேறு காரணங்களால் விரும்பப்படாத பொருளியற் கொள்கைகளை கடைப்பிக்கவேண்டிய தேவை அரசுக்கு ஏற்படாது.
- நாணயமாற்று வீதங்கள் பொருளாதார நிலையை பிரதிபலிப்பதனால், வளங்களின் வினைத்திறனான ஒதுக்கம் ஊக்குவிக்கப்படுகின்றது.

NOT FOR SALE

2.6

| கற்கை வெளிப்பாடு: |
|---|
| 4.8.1 தற்போது நிலவும் சமுதாய, கலாச்சார நிலைமை தன்மையையும், வியாபாரங்களில் அவற்றின் தாக்கங்களையும் ஆராய்க. |

- சுகாதாரம் மற்றும் உணவு முறைகள் – சில நாடுகளில் சுகாதாரம் மற்றும் உணவு முறைகள் பற்றிய மனப்பாங்கில் கணிசமான மாற்றம் காணப்படுகிறது. சில மக்கள் படிப்படியாக அதிக சுகாதாரமான உணவுவகைகளை நாடுகின்றனர். அத்துடன் மரக்கறி உணவு உண்போர் மற்றும் பச்சைப்பொருட்களின் நுகர்வு அதிகரித்துள்ளது. இது சேதன உணவுகளுக்கான (organic food) அக்கறையையும் அடக்குகின்றது.
- தொழிலில் பெண்கள் – வேலைத் தளங்களில் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து, பகுதி நேர மற்றும் நெகிழ்வுநேர தொழிற்போக்கு காணப்படுகின்றது.
- சூழற் காப்பு – சூழல் தாக்குப்பிடித்தல் மற்றும் பாதுகாப்பு தொடர்பாக அதிகரித்து வரும் அக்கறை காரணமாக, வியாபார நிறுவனங்கள் சூழலுக்கு ஏற்ற வியாபார நடைமுறைகளை நோக்கி நகருகின்றன.

2.7

| கற்கை வெளிப்பாடு: |
|---|
| 4.10.1 புவிச்சூழலில் புதிய மாற்றங்கள் மற்றும் வியாபாரங்களில் அவற்றின் தாக்கங்களை ஆராய்க. |

- தொலைத் தொடர்பு மற்றும் ஆகாயப் போக்குவரத்து அடங்கலாக, புவிநெடுகிலும் மேம்படுத்தப்பட்ட தொடர்பாடல்.
- நாடுகள் காப்பு நடத்தையை கைவிட்டு, வியாபாரத்தின் சாத்தியமான பயன்களை அனுபவிப்பதன் மூலம் வியாபாரத் தடைகள் நீக்கப்படல்.
- அரசியல் மாற்றங்கள் அனேக நாடுகளை வம்சரீதியான அல்லது அரச திட்டமிடற் பொருளாதாரங்களில் இருந்து சந்தை முறைமையை நோக்கி நகர்த்தியுள்ளது.
- அதிகரித்த போட்டித் தன்மை.
- புதிய வளர்ச்சியடைந்த சந்தைகளில் அதிகரிப்பு.
- நாடுகளுக்கு இடையே வியாபார கூட்டமைப்புக்களும் ஒருங்கிணைத்தலும்.

2.8

| கற்கை வெளிப்பாடு: |
|---|
| 6.5.1 வியாபாரத்தில் அளவிடைச் சிக்கனம் மற்றும் நோக்கெல்லைச் சிக்கனம் ஆகிய கோட்பாடுகளை ஆராய்தல். |

- தொகைக் கொள்வனவுக் கழிவுகள் மூலம் கொள்வனவு செய்யும் பொருட்களின் கிரயத்தை குறைத்தல்.
- தொக்கு வைத்திருப்பு மிகவும் வினைத்திறனாக மாறியமை
- தொகையாக விற்பனை செய்தல் பெரிய நிறுவனங்கள் வினியோகக் கிரயம் மற்றும் விளம்பரக் கிரயங்களில் சேமிப்பு பெறுவதற்கான இயலுமையை தரும்.
- பல்வேறு பொருட்களை வழங்குவதனால் நோக்கெல்லைச் சிக்கனம் அடையலாம்.

NOT FOR SALE

2.9

| கற்கை வெளிப்பாடு: |
|---|
| 6.13.1 கேள்வி மற்றும் நிரம்பல் நிலைமைகளில் போட்டிக் காரணிச் சந்தைகளில் ஊதியம் தீர்மானிக்கப்படும் முறையை ஆராய்க (ஊழியர் ஓய்வு முறையினை பயன்படுத்தி (using labour leisure model). |

- பிரதியீட்டுத் தாக்கம் (Substitution effect) – ஊதிய அதிகரிப்பு ஓய்வுக்கான சந்தர்ப்ப கிரயத்தை அதிகரிக்கின்றது. அதற்குக் காரணம், வேலை செய்யாத ஒவ்வொரு மணித்தியாலமும் கைவிடப்பட்ட வருமானத் தொகை தொடர்பில் பெரிய தியாகம் செய்யப்படுகின்றது. எனவே, பிரதியீட்டுத் தாக்கம் ஓய்வுக்குப் பதிலாக ஊழியரை வேலை செய்யத்தூண்டுகின்றது.

2.10

| கற்கை வெளிப்பாடு: |
|---|
| 6.14.2 வியாபாரத் தொழிற்பாடுகள் மற்றும் முகாமை தொடர்பில் தகவல் முறைமைகளின் தாக்கத்தை ஆராய்க. |

- ஊடுசெயல்களை பதிவுசெய்தல் – ஊடுசெயல் முறைமைகள் ஒவ்வொரு வியாபார ஊடுசெயல் அல்லது நிகழ்வு பற்றிய தகவல்களை பதிவுசெய்ய உதவுகின்றது.
- தீர்மானம் மேற்கொள்ளல் – தகவல் அளிக்கப்பட்ட தீர்மானங்களை மேற்கொள்ள தகவல் முறைமைகள் உதவுகின்றன.
- திட்டமிடல் – தகவல் முறைமைகள் பல திட்டமிடல் தரவுகளை வழங்குகின்றன.
- சாதனை அளவீடு – சாதனை அளவீட்டில் பயன்படுத்தப்படும் தரவுகளை சேகரித்து, பகுப்பாய்ந்து, முன்னிலைப்படுத்த தகவல் முறைமைகள் பயனுடையவை ஆகும்.
- கட்டுப்பாடு – திட்டங்களின் பெறுபேறுகளை கண்காணித்து கட்டுப்படுத்த தகவல் முறைமைகள் பயன்படுத்தப்படலாம்.

**(மொத்தம்: 30 புள்ளிகள்)**

NOT FOR SALE

# பிரிவு 02

## வினா 03

| கற்கை வெளிப்பாடு: |
|---|
| 2.7. தட்டுப்பாடு (scarcity), தேர்வு (choice) சந்தர்ப்பக்கிரயம் ஆகியவற்றிற்கு அறிமுகம் |
| 2.9 பொருளியல் இலாபம் எதிர் கணக்கியல் இலாபம் |

(a) i. "தட்டுப்பாடு" – அருமையானதாக அல்லது பற்றாக்குறையாக இருத்தல்.

ii. "சந்தர்ப்பக் கிரயம்" தீர்மானம் மேற்கொள்ளும்போது, கைவிடப்பட்ட சிறந்த மாற்றுத்தேர்வுப் பயன்களை அல்லது இழந்த பயன்களை பிரதிபலிக்கின்றது.

iii. "பொருளியல் இலாபம்" அல்லது நட்டம் என்பது பொருளின் விற்பனையால் பெறப்பட்ட வருமானத்திற்கும் பயன்படுத்திய உள்ளீடுகளின் சந்தர்ப்பக் கிரயத்திற்கும் இடையிலான வித்தியாசம் ஆகும்.

(b) தட்டுப்பாடு காணப்படும்போது, மேற்கொள்ளப்படும் முதலீட்டிலிருந்து உயர்ந்தபட்ச இலாபத்தினை உழைப்பதற்காக, தீர்மானம் மேற்கொள்பவர் முதலீட்டின் நிதிசார் இலாபத்தை மாத்திரம் கவனத்திற் கொள்ளாது முதலீட்டின் சந்தர்ப்பக் கிரயத்தையும், (அதாவது கைவிட்ட சிறந்த மாற்றுமுதலீட்டின் பயன்கள் / இழந்துபோன பயன்கள்) கவனத்திற் கொள்ளவேண்டும். இதனை செய்வதற்காக முதலீட்டாளர் முதலீட்டுக்கு ஒதுக்கிய வழங்களின் தட்டுப்பாட்டினை கவனத்திற் கொண்டு முதலீட்டின் பொருளியல் இலாபத்தினை கணித்தல் வேண்டும். அதன்பிரகாரம், பெறப்படும் நிகர இலாபம் அவர் முதலீட்டிலிருந்து பெற்ற உண்மையான இலாபத்தை பிரதிபலிக்கும்.

(c) பொருளியல் இலாபம் = வருமானம் - (இனம்காணக்கூடிய செலவுகள்+ இனம்காண முடியாத சந்தர்ப்பச் செலவுகள்)

| | **செயற்திட்டம் A** | **செயற்திட்டம் B** |
|---|---|---|
| ஆரம்ப மூலதனம் | 10,000,000 | 15,000,000 |
| வருடாந்த வருமான வீதம் | 15% | 18% |
| **வருமானம்** | **1,500,000** | **2,700,000** |
| | | |
| மேலதீக மூலதனம் | - | 5,000,000 |
| வட்டி வீதம் | - | 22% |
| இனம்காணக்கூடிய செலவுகள் | - | 1,100,000 |
| **கணக்கீட்டு இலாபம்** | **1,500,000** | **1,600,000** |
| இனம்காண முடியாத சந்தர்ப்பச் செலவுகள் | 1,600,000 | 1,500,000 |
| **பொருளியல் இலாபம்** | **(100,000)** | **100,000** |

**(மொத்தம்: 10 புள்ளிகள்)**

NOT FOR SALE

**வினா 04**

| கற்கை வெளிப்பாடு: |
|---|
| 4.4 பணவீக்கத்தின் வகிபாகம் |
| 4.6.2 வியாபாரத்தில் நிதி மற்றும் இறைவரிக் கொள்கைகளின் தாக்கத்தினை ஆராய்தல் |

(a) கேள்வி தூண்டல் பணவீக்கம் (demand-pull inflation) ஏற்படுவது நாட்டில் உற்பத்தி இயல்வலுவிலும் (அதாவது திரள் நிரம்பல் அல்ல மொத்த நிரம்பல் - aggregate supply)) பார்க்க திரள்கேள்வி (aggregate demand) அதிகமாக உள்ளபோது ஆகும். உதாரணம்: நுகர்வோரின் அதிகரித்த வருமானம் மட்டங்கள், அதிகரித்த அரசாங்க செலவினம், ஏற்றுமதிக்கான கேள்வியில் அதிகரிப்பு போன்றவை காரணமாக திரண்ட கேள்வியில் அதிகரிப்பு.

கிரய உதைப்புப் பணவீக்கம் (Cost push inflation) ஏற்படுவது, திரள் நிரம்பலில் வீழ்ச்சியை ஏற்படுத்தும் வகையில் பொருட்கள், சேவைகளின் உற்பத்திக் கிரயம் அதிகரித்தலினால் ஆகும்.
உதாரணம்: நாணயமாற்று வீதங்களின் பெறுமதி இழப்பு இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பு, கூலி வீதங்களில் அதிகரிப்பு போன்றவற்றை விளைவிக்கும்.

(b) நாடு அதன் போட்டியாளர்களைவிட உயர்ந்த பணவீக்க வீதத்தை கொண்டிருப்பின், அதன் ஏற்றுமதிகள் ஒப்பீட்டளவில் செலவுமிக்கதாகவும், இறக்குமதிகள் ஒப்பீட்டளவில் மலிவானதாகவும் இருக்கும். அதன் காரணமாக ஏற்றுமதிக்கான கேள்வி குறைந்து, இறக்குமதிக்கான கேள்வி அதிகரிக்கும். எனவே, இந்த நிலை நாட்டின் சென்மதி நிலுவையை எதிராகப் பாதிக்கும்.

(c)

- ஒடுக்கல் முறை இறைவரிக் கொள்கை (Contractionary fiscal policy), உயர் வரியீடு மற்றும் குறைந்த அரச செலவினத்தால் அடையப்பெறும்.
- ஒடுக்கல் முறை நிதிக் கொள்கை (Contractionary monetary policy), வட்டி வீத அதிகரிப்பு மற்றும் பணநிரம்பல் வீழ்ச்சியினால் அடையப்பெறும்.
- பணவீக்கத்தை விளைவுத்திறனாக கட்டுப்படுத்துவதற்கு விரிவாக்கக் கொள்கை களின் நிகரத் தாக்கத்துடன் ஒப்பிடுகையில், ஒடுக்குமுறை கொள்கைகளின் நிகரத் தாக்கம் பலம் மிக்கதாக இருத்தல் வேண்டும்.

**(மொத்தம்: 10 புள்ளிகள்)**

NOT FOR SALE

**வினா 05**

| கற்கை வெளிப்பாடு: |
| --- |
| 5.4 முகாமைத் தொழிற்பாடாக வழிநடத்தலின் (leading) தன்மை மற்றும் நோக்கெல்லை |

(a)

- தொழில்முயற்சி (Entrepreneurship) – வியாபார சந்தர்ப்பங்களை இனம்கண்டு, அதனை சாதகமாக பயன்படுத்துவதற்காக வளங்களை ஒருமுகப்படுத்தும் இயலுமை.
- நபர்களுக்கு இடையிலான திறமைகள் (Interpersonal skills) – வலையமைப்பு ஆக்கம், தொடர்புகளை கட்டியெழுப்புதல், தலையீடு, கலந்து ஆலோசித்தல், முரண்பாடுகளை தீர்த்தல், செவிமடுத்தல், ஆலோசனை வழங்குதல், பயிற்சியளித்தல், உறுதியான தொடர்பாடல் போன்றவை.
- விரிவான நோக்கம் அடங்கலாக தீர்மானம் மேற்கொள்ளலும் பிரச்சினைகளைத் தீர்த்தலும்.
- கால முகாமையும் தனிப்பட்ட அமைப்பு ஆக்கங்களும்
- சுயவிருத்தித் திறமைகள் (Self-development skills) – சுய தெளிவினை வளர்க்கவும், கற்கைச் சந்தர்ப்பங்களை சாதகமாக பயன்படுத்தவும் ஏதுவாக அனுபவத்திலிருந்து தொடர்ந்து கற்றுக்கொள்ளும் ஆற்றல்.

(b) தலைமைத்துவ சிறப்புப்பண்புக் கோட்பாட்டின் (trait theory) அடிப்படை ‘தலைவர்கள் பிறக்கின்றார்கள், அவர்கள் ஆக்கப்படுவதில்லை’ என்பதாகும். இது வெற்றிகரமான தலைவர்களுக்கு சில பொதுவான சுயபண்புகள் இருப்பதாக தெரிவிக்கின்றது.

எனினும், இந்தக் கோட்பாடு கீழ்வரும் காரணங்களால் அதிகம் ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை;

- தலைவர்களின் வெற்றி, தலைவர்களின் நடத்தை (பாங்குக் கோட்பாடுகள் - Style theories), சூழ்நிலைகள் (நெகிழதக்க கோட்பாடு- contingency theories) ஆகியவற்றிலும் தங்கியுள்ளது.
- விளைவுத்திறனான தலைமைத்துவத்திற்கு சில குறித்த பண்புகள் கட்டாயமாக அவசியமானவை எனும் நிலை உறுதிப்படுத்தப்படவில்லை.
- தலைவர்களுக்காக தெரிவித்த சிறப்புப்பண்புகள் எல்லையற்றவையாகவும், வேறுபட்டவையாகவும் மற்றும் முரண்பாடு உடையவையாகவும் உள்ளமை.
- சிறப்புப்பண்புக் கோட்பாடானது, தலைமைத்துவ நிலையின் சிக்கற் தன்மையை கவனத்திற் கொள்ளாததுடன், தலைமைத்துவ சிறப்புப் பண்புகளைக் கொண்ட எல்லோரும் நல்ல தலைவர்களாக அமைவதில்லை.

**(மொத்தம்: 10 புள்ளிகள்)**

NOT FOR SALE

**வினா 06**

| கற்கை வெளிப்பாடு |
|---|
| 6.8. சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தின் தன்மையும் நோக்கெல்லையும் |
| 6.9. அமைப்பொன்றில் சந்தைப்படுத்தலின் வகிபாத்திரம் |
| 6.10 சந்தைப்படுத்தற் தத்துவங்கள் |

1) சந்தை நிலைப்படுத்தல் என்பது, ஏனைய உற்பத்திக் குறிகள் அல்லது பொருட்கள் தொடர்பில் வாடிக்கையாளர்கள் ஒரு உற்பத்திக் குறி அல்லது பொருளை ஏற்றுக் கொள்கின்றனர் என்பதை குறிக்கின்றது.

(b)

- ஸ்ரார் கோலா நிலைப்படுத்தல் மாறியாக (positioning variable) தரம் மற்றும் அதிக விலையை பயன்படுத்துகின்றது.
- லைற்கோலா நிலைப்படுத்தல் மாறியாக குறைந்த விலையை பயன்படுத்துகின்றது.

(c)

1. விளம்பரம் - பரந்துபட்ட ஊடக நிறுவனங்களின் ஊடாக தங்களது உற்பத்திகளை விளம்பரப்படுத்துதல்.
2. விற்பனை ஊக்குவிப்பு - விலை ஊக்குவிப்புக்கள்
   eg: குறித்த காலப்பகுதிக்கான விலைகுறைப்பு
   போட்டிகளை ஒழுங்குபடுத்தல்
   விற்பனைக்கான ஊக்குவிப்புக்களை அதிகரித்தல்
3. பொதுமக்கள் தொடர்புகள்- நிறுவனத்திற்கும் மக்களுக்கான தொடர்புகளை அதிகரிப்பதனூடாக நிறுவனத்தின் நன்மதிப்பு உயர்ந்து அதனூடாக நிறுவனம் பிரபல்யம் அடைந்து விற்பனை அதிகரிக்கும்
4. நேரடியான சந்தைப்படுத்தல்- நேரடி விற்பனை ஊடாக வாடிக்கையாளருக்கும் நிறுவனத்திற்கும் இடையில் நேரடித்தொடர்பு ஏற்பட்டு விற்பனை அதிகரிக்கும்.

**(மொத்தம்: 10 புள்ளிகள்)**

NOT FOR SALE

# பிரிவு 3

**வினா 05**

| கற்கை வெளிப்பாடு : |
| --- |
| 3.5. கேள்வி, நிரம்பல் மற்றும் போட்டிச் சந்தையொன்றில் சந்தைச் சமநிலை |
| 3.7 போட்டிச் சந்தைகளில் அரசாங்க தலையீடுகளின் தாக்கம் |

(a)

**P** (d) = 160 - 0. 625Q
**P** (s) = 5 + 0.250Q
சமநிலைப் புள்ளியில், Pd = Ps
சமநிலைப் புள்ளியில் கணியம் (Eq) = 160 - 0. 625Q = 5 + 0.250Q
Eq; 155= 0.875 Q Eq = **177.14 (மில்லியன் பரல்கள்)**

P (சந்தைச் சமநிலை விலை); (கேள்வி அல்லது நிரம்பற் சார்புக்கு "Q" பெறுமதியை பிரதியிடுவதனால்;
**P = 160 – 0.625(177.14) = USD 49.28**

(b)

(i) அதன்படி, கீழ்நோக்கி சரிந்து செல்லும் கேள்வி வளையியின் கீழ் **ஒரு குறிப்பிட்ட அலகுகளுக்கு நுகர்வோன் செலுத்த விரும்பும் மொத்த விலைக்கும், அதே அலகு பொருட்களுக்கு உண்மையில் செலுத்தப்பட்ட மொத்தத் தொகைக்கும்** இடையே எப்போதும் இடைவெளியொன்று காணப்படும். இந்த இடைவெளியை பிரதிபலிக்கும் தொகை **நுகர்வோர் மிகை** எனப்படும். இந்த இடைவெளியானது நுகர்வோனுக்கு கிடைக்கும் மிகையினை குறிக்கின்றது.

எல்லைப்பயன்பாடு கணிக்கப்படுகிறது, வேறுபட்ட நுகர்வோர்களின் பொருட்களின் அளவில் வேறுபடுகின்றது. நுகர்வோர் செலுத்தத் தயாராக இருந்த விலைக்கும் செலுத்திய விலை குறைவானதாக காணப்படின் இந்நிலமை நுகர்வோர் மிகை எனப்படும்.



(ii) நுகர்வோர் மிகை (CS)

CS = (USD 160.00 - 49.28) x (177.14 மில்லியன்) / 2 = **USD 9,806.47 மில்லியன்**

(c)

(i) உலகப் பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக வாடிக்கையாளரின் வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி

மசகு எண்ணெயின் கேள்வியில் வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

(ii) எரிபொருளை சிக்கனமாக பயன்படுத்தும் சலவை மற்றும் மின்சாரக் கார்களின் அறிமுகம்.

(d) புதிய அகழ்வாராய்ச்சியின் காரணமாக மசகு எண்ணெயில் இருப்பு அதிகரித்து மசகு எண்ணெயிற்கான நிரம்பல் கோடானது S1-S2 நகரும் .

இதன் விளைவாக சந்தைச் சமைநிலையானது வீழ்ச்சியடையும் P1-P2 அத்துடன் சமநிலைக் கேள்வியானது Q1 இருந்து Q2 ஆக அதிகரிக்கும்

(i)




(e)

OPEC நாடுகளால் உலக சந்தையில் மசகு எண்ணெயின் நிரம்பலை குறைப்பதன் காரணமாக அரசாங்கத்தின் நேரில் வரி வருமானம், சென்மதி நிலுவை மற்றும் நுகர்வோர் விலைச் சுட்டிகளில் உணரக்கூடிய சாத்தியமான தாக்கங்கள்:

(i) **உள்நாட்டில் எரிபொருட்களின் சில்லறை விற்பனை விலைகள் தொடர்ந்து மாறாமல் இருக்குமாகில்;**

(a) OPEC நாடுகளின் தீர்மானம் விளைவுத்திறனுடன் நடைமுறைப்படுத்தப் பட்டால், திறந்த சந்தையில் மசகு எண்ணெய்ப் பீப்பாய் ஒன்றின் விலையானது தற்போதைய விலை மட்டமான US$ 49.28 இலும்பார்க்க அதிகரிப்பதுடன், உலக சந்தையில் விலை அதிகரிப்புக் காரணமாக, எரிபொருளுக்கான மொத்த இறக்குமதிக் கிரயம் அதிகரித்து, இறக்குமதிக் கிரயத்திற்கும் ஏற்றுமதி வருமானத்திற்கும் இடையில் நிலவும் பாதக இடைவெளியை அதிகரிக்கச் செய்யும். இது நாட்டின் சென்மதி நிலுவை பிரச்சினையில் பாரிய அழுத்தத்தை ஏற்படுத்தும்.

NOT FOR SALE

(b) எரிபொருளின் சில்லறை விலை தொடர்ந்து மாறாமல் உள்ளமையால் அடிப்படையில், நுகர்வோர் விலைச் சுட்டியில் எந்தவொரு தாக்கமும் ஏற்படாது. ஆனால், எரிபொருளின் அதிகரித்த இறக்குமதிக் கிரயத்தை செலுத்தித் தீர்ப்பதற்கு US$ க்கான கேள்வி அதிகரிப்பதன் காரணமாக இலங்கை ரூபாவின் அந்நியப் பெறுமதியில் அழுத்தம் ஏற்படும்.

(ii) **உலகச் சந்தையில் இடம்பெறுக்கூடிய சாத்தியமான மசகு எண்ணெய் விலை மாற்றங்களுக்கு அமைய அரசாங்கம் எரிபொருட்களின் உள்நாட்டு சில்லறை விற்பனை விலைகளை மாற்றினால்:**

(a) இறக்குமதிக் கிரய அதிகரிப்பு காரணமாக அலகொன்றின் இறக்குமதிக் கிரயம் (அதாவது, ஒரு லீட்டர் எரிபொருளின் கிரயம்) அதிகரிக்கும். எனினும், அதற்கு ஒப்பாக சில்லறை விற்பனை விலையும் அதிகரிக்கப் படுவதால், மசகு எண்ணெயின் விலை அதிகரிப்பு பகுதியாக அல்லது முழுவதுமாக உள்நாட்டு நுகர்வோர் மீது சுமத்தப்படும். ஒரு அலகின் இறக்குமதிக் கிரய அதிகரிப்பு முற்றிலும் நுகர்வோர் மீது சுமத்தப்படின், அலகொன்றிற்கான நேரில் வரி மாறாமல் இருக்கின்ற போதிலும், சில்லறை விலையில் அதிகரிப்புக் காரணமாக குறைந்தபட்சம் குறுகிய காலத்திலாவது உள்நாட்டில் எரிபொருள் நுகர்வில் வீழ்ச்சி ஏற்படும் சாத்தியம் மொத்த நேரில் வரி வருமானத்தை குறைவடையச்செய்யும். எனவே, மொத்த நேரில் வரி வருமானத்தில் இறுதித் தாக்கமானது, சில்லறை விலையில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் அளவு மற்றும் எரிபொருள் விலை அதிகரிப்பிற்கு உள்நாட்டு நுகர்வோரின் பிரதிபலிப்பு ஆகியவற்றில் தங்கியிருக்கும்.

(b) முதலாவது தருநிலையில், உலகச் சந்தையில் விலை அதிகரிப்புக் காரணமாக, எரிபொருளின் மொத்த இறக்குமதிக் கிரயம் அதிகரித்து, அதன் காரணமாக தற்போது நிலவுகின்ற இறக்குமதிக் கிரயத்திற்கும் ஏற்றுமதி வருமானத்திற்கும் இடையிலுள்ள பாதகமான இடைவெளி விரிவடையும். இது நாட்டின் சென்மதிநிலுவை மீது அதிக அழுத்தத்தை விளைவிக்கும்.

(c) எரிபொருளின் இறக்குமதிக் கிரய அதிகரிப்பை ஈடுசெய்வதற்கு ஏதுவாக உள்நாட்டு சில்லறை விற்பனைவிலை அதிகரிக்கப்படாத காரணத்தால் பொது மற்றும் தனியார் போக்குவரத்து, மின்பிறப்பாக்கம் உற்பத்தி போன்ற கிரயங்கள் தொடர்பாக எரிபொருள் நுகர்வுக் கிரயத்தில் ஒத்த அதிகரிப்பு ஏற்படும். மரக்கறிவகை போன்ற நுகர்வோர் பொருட்களின் உற்பத்திக் கிரயம் மற்றும் போக்குவரத்துக் கிரயம் கட்டாயமாக அதிகரிப்பதுடன், சங்கிலித்தாக்கம் ஏற்படுவதன் காரணமாக நுகர்வோர் விலைச் சுட்டியை பாதிக்கக்கூடியவாறு **கிரய உதைப்பு பணவீக்கம்** (cost push inflation) ஏற்படும். இந்த மாற்றங்களின் விளைவாக தமது அங்கத்தவர்களுக்கு சம்பள அதிகரிப்பு கோரும் சாத்தியமான தொழிற் சங்க நடவடிக்கை காரணமாக நடுத்தர அல்லது நீண்ட காலங்களில் நிலை இன்னும் மோசமடையும்.

**(மொத்தம்: 20 புள்ளிகள்)**

NOT FOR SALE

## பொறுப்பு மறுத்தல் அறிவித்தல் - Notice of Disclaimer

இந்த விடைகள் முற்றுமுழுதாக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தால் (CA Sri Lanka) தரப்பட்டுள்ளதுடன், இவற்றை மாதிரி விடைகள் என்ற அடிப்படையிலேயே நீர் ஏற்றுக் கொள்கின்றீர்.

இவை மாதிரி விடைகளாக கருதப்பட வேண்டுமே தவிர சரியான / எதிர்பார்த்த விடைகளாக அல்ல.

இந்த விடைகள் இரண்டு அடிப்படை நோக்கங்களை கொண்டுள்ளன. அவையாவன:

1. பரீட்சை வினா ஒன்றிற்கு மாதிரி விடைக்கான விபரமான உதாரணத்தை தருதல்ளு அத்துடன்

2. பாடத்தில் மாணவரின் ஆராய்ச்சி மேற்கொள்ள அவர்களுக்கு உதவுவதுடன், பாடம் பற்றிய அவர்களின் அறிவு மற்றும் விளக்கத்தை அதிகரிக்க உதவுவதாகும்.

இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் இந்த மாதிரி விடைகள் தொடர்பில் எந்தவொரு உத்தரவாதத்தையும் தரவில்லை ஆதலினால், இது தொடர்பாக எந்தவொரு துயரையும் இந்த இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு எதிராக நீர் கொண்டுவருதல் அர்த்தமற்றது. எனினும், நீர் இது தொடர்பாக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு எதிராக நடவடிக்கை, கோரிக்கை, வழக்கு, அச்சுறுத்தல் அல்லது கேள்வி எதனையும் எழுப்பி அதில் நீர் வெற்றிபெறாத இடத்து இதனால் நிறுவகத்திற்கு ஏற்படும் சட்டச் செலவுகள் மற்றும் எதிர் நடவடிக்கை தொடர்புபட்ட சகல செலவுகளையும் நீர் பட்டக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு நீர் செலுத்த வேண்டும். இதே விடயத்திற்காக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் அதன் இந்த உரிமையையோ அல்லது இதில் விபரிக்கப்பட்டுள்ள அல்லது இலங்கைச் சட்டங்களின் கீழான அதன் உரிமைகளையோ உறுதிப்படுத்துவதற்காக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள கட்டாயப்படுத்தப்படின், அதற்குரிய சட்டக் கட்டணம் மற்றும் செலவுகளை நீர் இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு செலுத்த வேண்டும்.

© 2013 இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் (CA ஸ்ரீலங்கா).
முழுப் பதிப்புரிமையுடையது. இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் எழுத்துமூல முன் அனுமதியின்றி இந்த ஆவணத்தின் பகுதியினை மறுபிரசுரம் செய்வதோ அல்லது எந்த வடிவத்திலும் இலத்திரனிய, எந்திர, புகைப்படப் பிரதியிடல் பதிவுசெய்தல் மற்றும் ஏனைய ஊடகங்களினூடாக அனுப்புதலோ கூடாது.

NOT FOR SALE